பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 05 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதுப்பிக்கப்பட்ட சோம்நாத் ஆலயம் திறக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் சோம்நாத் அமுதப் பெருவிழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

2. கிராமப்புறங்களில் சாலைக் கட்டமைப்புகளை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்படுவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

3. புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிக்கான கட்டமைப்புகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. கோஸ்டாரிகா உடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

5. ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டி, காந்தி நகரில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புதுப்பிக்கப்பட்ட சோம்நாத் ஆலயம் திறக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் சோம்நாத் அமுதப் பெருவிழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

இன்று ஜாம்நகரில் இருந்து சோம்நாத் செல்லும் பிரதமர், அங்கு நடைபெறும் சாலைப் பேரணியில் பங்கேற்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து சோம்நாத் ஆலயத்தின் புனரமைப்பில் முக்கிய பங்காற்றிய சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலைக்கு பிரதமர் மரியாதை செலுத்த உள்ளார்.

பின்னர் சோம்நாத் ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்ளும் பிரதமர், அந்த ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும் கலந்துகொள்கிறார்.

பின்னர் விமானப்படையினர் நிகழ்த்தும் சாகச நிகழ்ச்சியைப் பார்வையிடும் பிரதமர், அங்கு நடைபெறும் பொதுக்கூட்டம் ஒன்றிலும் பங்கேற்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியின்போது சோம்நாத் ஆலயம் தொடர்பான அஞ்சல்தலையையும், 75 ரூபாய் மதிப்பிலான சிறப்பு நாணயத்தையும் அவர் வெளியிடுகிறார்.

பின்னர் வதோதரா செல்லும் பிரதமர் அங்கு சர்தார்தாம் விடுதியை திறந்து வைக்கிறார்.

இதில் தலா ஆயிரம் மாணவ-மாணவிகள் தங்கும் வகையில் தனித்தனியாக விடுதி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விடுதி வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நவீன வசதிகளையும் திரு. நரேந்திர மோடி பார்வையிட உள்ளார்.

இந்தியா அனைத்து துறைகளிலும் தற்போது பாரம்பரியத்தை மீட்டெடுத்து வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சோம்நாத் ஆலயம் புதுப்பிக்கப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவு விழா தொடர்பாக அவர் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து தாக்குதலை எதிர்கொண்டபோதும் இந்த ஆலயம் மீண்டு எழுந்து வந்துள்ளது என்று கூறியுள்ளார்.

நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சோம்நாத் வலிமையுடன் திகழ்வதைப் போலவே நாட்டின் பொருளாதாரமும் வலிமையுடன் உள்ளது என்றும், இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நமது பாரம்பரிய நடைமுறைகளான ஆயுர்வேதம், யோகா போன்றவை உலகெங்கிலும் தற்போது முக்கியத்துவம் பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஆயுர்வேதம் மற்றும் யோகா வல்லுநர்கள் பயனடைவார்கள் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஜனநாயகத்தின் அடித்தளங்களை வலுப்படுத்துவதில் அரசியல் சாசனமும், நீதித்துறையும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சொலிசிட்டர் ஜெனரல் திரு. துஷார் மேத்தா எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் நேற்று அவர் பங்கேற்றார்.

நமது அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தின் வேர்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் உரிமைகளைக் காப்பதில் நீதிமன்றங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் கூறினார்.

நீதித்துறையும், நிர்வாகமும் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு அமைப்புகளுக்கு இடையே உள்ள ஒருங்கிணைப்பே ஜனநாயகத்தை மேலும் வலுவானதாக்கும் என்று திரு. அமித் ஷா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

கிராமப்புறங்களில் சாலைக் கட்டமைப்புகளை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்படுவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தில் பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் கிராமப்புற சாலைகள் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

இவை கிராமப்புற மக்களின் கல்வி, சந்தை வாய்ப்புகள், சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாக அவர் கூறினார்.

மத்தியப்பிரதேசத்தில் பிரதமரின் கிராமப்புற சாலைகள் திட்டத்தின் நான்காவது கட்டத்தில் 973 சாலைகள் அமைக்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இவை 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சுயசார்பு நிலையை அடைவது முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நேற்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், உள்ளூர் பொருட்களை வாங்க மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் எரிபொருள் நுகர்வை முடிந்த அளவு குறைத்து அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க உதவ வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

விவசாயிகள் நலனில் அரசு அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

மத்திய அரசின் செயல்பாடுகள் காரணமாக நாடு முழுவதும் பிஜேபியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

மேற்குவங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இது எதிரொலித்துள்ளதாக அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சி ஊழலையும், வாரிசு அரசியலையும் ஊக்குவித்து வந்துள்ளதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிக்கான கட்டமைப்புகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சி மையத்தை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிகளுக்கான உள்கட்டமைப்புகளை அரசு தொடர்ந்து மேம்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் முக்கியமான உயர்கல்வி நிறுவனங்களில் விண்வெளி துறை தொடர்பான ஆய்வகங்கள் அமைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஆராய்ச்சிகளுக்கும், புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கும் ஊக்கமளிப்பதாகவும், அதன் மூலம் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

கோஸ்டாரிகா உடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு சென்றுள்ள அவர் நேற்று **Wall** பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலகம் ஒரே குடும்பம் என்ற கொள்கையில் இந்தியா செயல்பட்டு வருவதாக திரு. பபித்ரா மார்கரிடா கூறினார்.

முன்னதாக அந்நாட்டின் புதிய அதிபர் பதவியேற்பு நிகழ்ச்சியிலும் அமைச்சர் பங்கேற்றார்.

<<<<>>>>

அஸ்ஸாமில் புதிய அரசு அமைக்க முன்வருமாறு தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய முதலமைச்சரான திரு ஹிமந்த பிஸ்வ சர்மாவுக்கு, அம்மாநில ஆளுநர் திரு லக்ஷ்மண் பிரசாத் ஆச்சாரியா அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னதாக, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித்தலைவர்கள், திரு ஹிமந்த பிஸ்வ சர்மா தலைமையில், ஆளுநர் திரு லக்ஷ்மண் பிரசாத் ஆச்சாரியாவை சந்தித்து, ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

அஸ்ஸாம் சட்டப்பேரவைத் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றிபெற்று பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாளை பதவியேற்கவுள்ளது.

இதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கேபினட் அந்தஸ்தில் இரண்டு பேரும், இணையமைச்சர் பொறுப்பில் இரண்டு பேரும் நேற்று பொறுப்பெற்றுக்கொண்டனர்.

லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திருமதி **Anandiben Patel** புதிய அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

திரு **Bhupendra Chaudhury,** திரு மனோஜ் பாண்டே ஆகியோர் கேபினட் அமைச்சர்களாகவும், திரு அஜித்பால் சிங் மற்றும் திரு சோமேந்திர தோமர் இணையமைச்சர்களாகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

<<<<>>>>

குப்பம் நகராட்சி தேசிய விருது பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கடந்த ஆண்டிற்கான சிறந்த பஞ்சாயத்து அமைப்புகளுக்கான விருதில் குப்பம் நகராட்சி மூன்றாவது இடத்தை பிடித்து ஒன்றரை கோடி ரூபாய் பரிசுத் தொகை வென்றதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருங்கிணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளை இதற்கு காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக குப்பம் நகராட்சியில் பணியாற்றிவரும் அனைத்து அலுவலர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளித்தால் வெற்றி நிச்சயம் என்றும் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டி, காந்தி நகரில் இன்று தொடங்குகிறது.

வரும் 17ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா உள்ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த 170க்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்கின்றனர்.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - சென்னை அணியை வென்றது.

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 7 விக்கெட் இழப்புக்கு 166 ரன் எடுத்தது.

**<<<<The End>>>>**